524

தாரண வருஷ
தை - மாசி மீ

ஸ்ரீ:

ஸம்புடம் - 4
ஸஞ்சிகை - 2

February ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: 1945



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

"ஸுகோபவிஷ்டம் [illegible] |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமாங்கம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||"

பக்கம்

விஷய ஸூசிகை :—1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் 11
2. சந்தாதாரர்கட்கு ஒரு விண்ணப்பம் 12
3. ஸ்ரீ தேசிக வைபவம் 13
4. ராவ் கமிட்டி பில் கண்டனம் 14
5. செய்திகள் 15
6. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 17
7. பஞ்சாங்க ஸங்க்ரஹம் 18

Rebus

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[4-ஆம் அங்கம்]

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,
அட்வோகேட், திருச்சி]

[ஸம்புடம் 4, ஸஞ்சிகை 1, பக்கம் 3-ன் தொடர்ச்சி]

காமன்—[உள் நடுக்கத்துடன் சுற்றிப் பார்த்துவிட்டு] நாம் திரும்பிப் பின் செல்லுவோம், இப்பொழுது, 'நீங்காத ப்ரஜ்ஞைத் தெளிவுக்கு ஸஹஜமான அத்புதமான தைர்யத்தோடு கூடி, திதிக்ஷை (எதையும் பொறுக்கும் ஸ்திரப் பொறுமை) ஸந்தோஷமென்னும் மிகக் கெட்டியான கவசத்தைப் பூண்டு, யாரோ ஒருவரால் (க: என்னும் ப்ரஹ்மதேவரால்) ஓட்டப்ப[illegible] ப்ரணவமென்னும் ரதத்தில் ஏறிக்கொண்டு, விவேகன் என்னுடைய ஸேனைப் ப[illegible] பேதிக்கிறுன்' என்று சொல்லவே எல்லாரும் பயப்படுகிறுர்கள். [illegible]த' என்று கீதை உபதேசத்தொடக்கத்தில், 'பூதங்களின் ஸ்பர்ஶங்[illegible]க்ஷாபங்களைத் திதிக்ஷை செய்யவேணும்; மதியாமல் கலங்காமல் [illegible]ம்' என்றும், அதே இரண்டாம் அத்யாய முடிவிலும் 'எத்தனை [illegible] புகுந்தாலும் ஸமுத்ரம் எப்படி க்ஷோப மடையாமல் அசல ப்ர[illegible]ஸ்திரமாய்] இருக்குமோ, அப்படியே என்ன இன்பங்கள் [காமங்

JL
Q22:wa21,M41
N45.4.2
210134

கள்] நெருங்கிப் புகுந்தாலும் எவன் கலங்காம லிருப்பானோ அவனே சாந்தி யடைவான்; காமகாமியா யிருப்பவன் சாந்தி ஸுகம் பெறான்' என்றும் பாடிற்று. 3-வது அத்யாயத்தின் முடிவு ஶ்லோகத்தின் சந்த்ரிகையில், 'மிக்க த்ருடமான ஸத்வ கவசத்தைப் பூண்டாலல்லது ப்ரபல சத்ருவான காமனை ஜயிக்க முடியாது' என்று கூறப்பட்டது. 'திதிக்ஷை என்கிற கவசத்தைத் தரித்துக்கொண்டு' என்பதனால், இதையெல்லாம் ஸ்வாமி நினைப்பதை நினைக்கவேணும். த்ரிபுர ஸம்ஹாரத்தில் வேதங்கள் குதிரைகள், ப்ரஹ்மா ஸாரதி, அஸ்த்ரம் நாராயணாஸ்த்ரம், சரீர மென்பது ஓர் புரம். 'ப்ரஹ்மபுரம்' என்று ஶ்ருதி. 'நவத்வாரே புரே' என்று கீதை. புர்யஷ்டக மென்பர். சரீர மென்னும் புரத்தில் அபிமானத்தையும் ஆத்ம புத்தியையும், ப்ரணவ ரதாரூடராய் ஜயிக்கலாம்.

வஸந்தன்—உங்களில் ஒருவருக்கு விபத்து வந்தால், ஆஶ்ரிதராகிய உங்களை ப்ராணனாக நினைத்திருக்கும் மோஹராஜரும் உயிரை விட்டுவிடுவார். ஸதியாகிய அவரை உயிராக மதித்து நேசிக்கும் துர்மதி தேவியும் உடன்கட்டை யேறி உயிரை மாய்த்துக் கொள்வள். ஆகையால் இந்த விவேகன் கோட்டையிலிருந்து உடனே அகன்று விலகி விடுவதே நலம். [காமனை மூலமாகவும் நிமித்தமாகவும் கொண்ட படை 'காமாத்பவதி ஸம்மோஹ:'. மோஹனின் பெருமை காமனால் பெருகும்].

லோபன்—ராஜா இல்லாமல் நாம் தனியே போரில் இறங்கக்கூடாது. அவரே பின் நடக்கவேண்டிய வழியை ஆலோசிப்பர். எப்படியும் நம் உயிரைக் காப்பாற்றி வைத்துக்கொண்டே யிருக்கவேணும். எல்லா ஆபத்துக்களிலிருந்தும் எவ்விதமாயும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று ஶ்ருதி. 'ஏதி ஜீவந்தமாநந்தோ நரம் வர்ஷஶதாதபி' என்கிற லோகப் பாசுரம் மிக கோமளமென்றே எனக்குத் தோன்றுகிற தென்று ஸீதை அசோக வநத்தில் துக்க ஸாகரத்தில் மூழ்கியிருக்கையில் பேசினாள். ராவணன் படைகளாகிய மநோநிஷ்டமான இப்படைகள் அப்பொழுது ஸீதை பேசினதைக் கேட்டவர்களென்று ரஸம். இது ராமாயணத்தில். மஹா பாரதத்தில் ஸாவித்ரியின் உபாக்யாநத்தில் 'ஜீவன் பத்ராணி பஶ்யதி' என்று உளது. உயிரை வைத்துக்கொண்டே யிருந்தால் ஒரு காலத்தில் மங்களங்களை யநுபவிக்கலாம்.

காமன்—விழிப்பில்லாமல் தூங்கிக்கொண்டிருக்கும்போது ஹிம்ஸிக்கலா மென்று ஸமயம் பார்த்துக்கொண்டிருக்கும் நாம், நம்மீது கோபங்கொண்ட விவேக னென்னும் பாதாளக் குழியில் விழலாகாது. நம் மஹாராஜர் இப்பொழுது உடனே, டம்பன் தர்ப்பன் குஹனை அஸூயை முதலிய நம் ஸைநிகரைக் கடாக்ஷித்து, அவர்களையும் கொண்டு எதிர் யுத்தம் தொடங்க முயல்வர். ஜீவன் இப்பொழுது யோகத்தி லிருப்பதால், அவர் விழித்திருக்கும் ஸமயம். யோகம் கலைந்து உலக விஷயங்களில் கவனமாயிருப்பது அவருக்குத் தூக்க ஸமய மென்று சொல்லலாம். அப்படித் தூக்கமான ஸமயத்தில் நாம் எதிர்ப்பது தோது. இது இந்த அங்கத்தின் கடைசி ஶ்லோகம். அடுத்த ஐந்தாம் அங்கத்தில் டம்பனும் குஹனையும் ப்ரவேசிக்கப்போகிறார்கள். பிறகு அங்கே தர்ப்பனும் அஸூயையும் வரப் போகிறார்கள். அடுத்த அங்கத்தில் வரப்போகும் பாத்ரங்கள் இங்கே ஸூசிக்கப்படுகிறார்கள். மோஹன் படைகள் எத்தனையோ உள. காமம் க்ரோதம் லோபம் த்ருஷ்ணை இவற்றுக்குத் தப்பினாலும், டம்பன் அஸூயை முதலிய படைகள் உள. ஆசிரியராயிருக்கும் காம க்ரோதத்தை ஜயித்த பெரியாரைக்கூட டம்பமும் அஸூயையும் விடாமல் ஒட்டியிருக்கப் பார்க்கு மென்பது 'டம்பாஸூயாதிமுக்தம்' என்ற ஆசார்ய லக்ஷண ஶ்லோகத்தில் வ்யஞ்ஜநம் செய்யப்பட்டது. ஸூத்ரகாரரும் டம்பத்தை விட்டதென்னும் பால்ய குணத்தை ஸாதந பாதத்தின் கடைசி பாகத்தில் பேசினார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்காய்ப் பின்வாங்கி மறைவோம். தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உலகம் முழுவதையும் விட்டுவிடலாம் என்றல்லவோ கூறுகிறார்கள்? (எல்லோரும் கலைந்தனர்).

இப்படிக்குக் காமாதி வ்யூஹ பேத மென்கிற **நான்காம்** அங்கம் முற்றிற்று. இங்கும் ஒரு சமத்காரம். வ்யூஹ பேத மென்பது வ்யூஹ வகுப்பையும், வ்யூஹம் கலைவதையும் சொல்லும். இரண்டு மிங்கே காட்டப்பட்டது. ஸம்ஜ்ஞை முதற்கொண்டு ரஸம் ததும்பும் க்ரந்தம்.

சந்தாதாரர்கட்கு ஒரு விண்ணப்பம்

1944-ம் வருஷத்துச் சந்தா பாக்கி (ரூ. 3) செலுத்தாத சந்தாதாரர்கள், நாளைப் பிப்ரவரி மாதத்திற்குள் அதனைச் செலுத்தி உதவிபுரியவேண்டு மென்றும், அவ்வாறு செலுத்தத் தவறிய சந்தாதாரர்கட்கு மார்ச் மாதத்து ஸஞ்சிகை வி. பி. யில் அனுப்பும்படி நேரிடு மென்றும், 1945-ம் ஆண்டுக்குச் சந்தா செலுத்தாத சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை (ரூ. 2) நாளை ஏப்ரல் மீ முடிவிற்குள் அனுப்பி உதவ வேண்டு மென்றும் மீண்டும் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறார்கள்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ தேசிக வைபவம்

[சிறுங்கட்டூர். ஸ்ரீ. உப. S. N. ஸ்ரீராமதேசிக சிரோமணி
S. V. O. இன்ஸ்டிட்யூட், திருப்பதி.]

[ஸம்புடம் 4, ஸஞ்சிகை 1, பக்கம் 7-ன் தொடர்ச்சி.]

வேதம், கர்ம காண்டம் ப்ரும்ஹ காண்டம் என்று இருவகைப்பட்டது. இவற்றுள் கர்ம காண்டத்தில் பரம்பரையாக ப்ரும்ஹம் ப்ரதிபாதிக்கப்பட் டிருந்தபோதிலும், ப்ரும்ஹ காண்டம் ஸாக்ஷாத் ப்ரும்ஹத்தை ப்ரதிபாதிக்கிறபடியால் உபநிஷத் என்றும், ஸகல வேதங்களுடையவும் முடிவிலிருப்பதால் வேதாந்த பாகம் என்றும் வழங்கப்படுகிறது. இவ் வேதாந்த மென்று சொல்லப்படும் உபநிஷத்துக்கு வ்யாக்யாநமான ப்ரும்ஹ ஸூத்ரம், அதற்கு வ்யாக்யாநமான ஸ்ரீபாஷ்யம் முதலிய உபநிஷதர்த்த விவரணபரமான க்ரந்தங்கள், எல்லாம் வேதாந்த மென்றே கூறப்படுகின்றன. இவ் வேதாந்தத்தை நன்கு கற்றும், பிறர்க்குப் பன்முறை உபதேசித்தும், எதிரிகளோடு வாதித்து அதை நிலைநாட்டியும், வேதாந்த ஸ்தாபந பரமான பல நூல்களை இயற்றியும், உலகத்தினிடையே மாபெரும் உபகாரம் செய்துள்ள தேசிக மணிக்கு வேதாந்தாசார்ய னென்ற திருநாமம் மிகப் பொருத்தமாகவே அமைந்துள்ளது. க்ரந்த முகத்தாலும் ப்ரவசந முகத்தாலும் வேதாந்த ஸ்தாபகரான இம் மஹானை வேதாந்தாசார்யரென்று உரைப்பதல்லவோ ஸ்வரூபகதநமாகும்? ஸகல தர்சநங்களிலும் தேர்ச்சிபெற்ற சங்கராசார்யருக்கு ஷட்தர்சநாசார்ய ரென்று ஓர் பிருதம் உண்டு. அப்படியே நம் ஆசார்யன் எல்லாத் தர்சநங்களிலும் வல்லமை உடையவராயிருந்தபோதிலும், மற்றவர்களைப்போல் சில நூல்களால் வேதாந்த விஷயங்களைப்பற்றியும் மற்ற காவ்யங்களால் விஷயாந்தரங்களைப்பற்றியும் கூறுமல், காவ்ய நாடக ஸ்தோத்ராதி ஸகல ப்ரபந்தங்களாலும் வேதாந்த விஷயத்தையே ப்ரதாநமாக நிரூபித்தபடியால் வேதாந்தாசார்ய னென்கிற பிருதமே ரங்கநாதனுல் அளிக்கப்பட்டது. வர்ஷ மூதம் நாம் ஆராய்வோமாலும், தேசிக க்ரந்தங்களிலும் வேதாந்த விசாரமற்ற ஒரு வாக்யத்தையோ ஒரு பாகத்தையோ காண்பது அரிதேயாகும். ஸ்தோத்ரங்களைக் கற்க அதிகாரமுள்ளவர்களுக்கு அவற்றின் மூலமாகவும், காவ்யங்களை அப்யஸிக்க அதிகாரம் வாய்ந்தவர்களுக்குக் காவ்ய முகத்தாலும், ஶாஸ்த்ர படநத்தில் அதிகார முள்ளவர்களுக்கு ஶாஸ்த்ர முகமாகவும், அவ்வவ்வதிகாராநுகுணமாக ஆங்காங்கு வேதாந்த விஷயத்தை எடுத்துரைக்கும் திறமைதான் என்னே!

ஸ்ரீமந் நாதமுனிகள் முதலாக தேசிகன் வரையிலுள்ள பூர்வாசார்யர்களால் வேதாந்த ஸ்தாபநம் செய்யப்பட்டிருந்தபோதிலும், நம் தேசிகமணி அநேக க்ரந்த மூலமாகவும் ப்ரவசந மூலமாகவும் வேதாந்த ஸ்தாபநம் பண்ணினபடியால், அவர்களுக்குள் தேசிகனுக்கு உள்ள ஏற்றம் 'வர்ய' சப்தத்தாலும் 'सिद्धं सत्संप्रदाये' என்று சொன்ன ஆசார்ய குணபூர்த்தி ஆசார்ய சப்தத்தாலும் ஸூசிதம்.

5. मे

தேசிக வைபவ ப்ரதிபாதகமான ஸூத்ரம் ஸ்வாமி குமாரரால் இயற்றப்பட்டது என்று முன்னமே கூறியுள்ளோம். இதுவரை உள்ள நான்கு பதங்களால் தேசிக வள்ளலின் மஹிமையைச் சொல்லி, இப்படிப்பட்ட ஆசார்யர் என் உள்ளத்தில் வஸிக்கட்டும் **सन्निधत्तां सदा हृदि**' என்பதால் சொல்லப்போகிறவராய், நடுவில் தமக்குள்ள சில மஹிமைகளை **मे** என்ற பதத்தால் ஸாதித்தருளுகிறுர் ஸ்வாமி குமாரர்.

அவைகளாவன:—ஸ்ரீரங்க மென்று ப்ரஸித்தி பெற்ற திவ்ய தேசத்தில் விஷய விரக்தராய் வைராக்யநிதியாய்த்தேசிகன் எழுந்தருளியிருக்குங் காலத்தில்,ஒருநாள் தேவப்பெருமாள் இவர் ஸ்வப்நத்தில் தோன்றி, 'நீர் ஒருநாளாவது பத்நியுடன் வர்த்தியும்; நான் உமக்குப் புத்ரனுக ஜநிக்கின்றேன்; புத்திரனன்றி யிருப்பது உசிதமாகாது' என்று நியமிக்க, ஸ்வாமியும் இதை ஒரு நியமநமாக எண்ணி ஶாஸ்த்ரங்களில் சொல்லியபடி கர்ப்பாதாநத்திற்கு நாள் பார்க்க, பன்னிரண்டு வர்ஷம் நாள் கிடைக்காமல் பிறகு ஒரு நாள் கிடைக்க, அன்று தேவியாரிடம் வர்த்திக்க, அதனுல் ஜநித்த சிசுவிற்கு வரதாசாரியர் என்னும் திருநாமம் சாத்தினு ரென்றும், நயினாராசார்யர் அவதரித்த சில நாட்களுக்குப் பிறகு அநந்தஸூரியின் திருவத்யயநம் வர, அதற்கு ஸ்வாமியும் முதல் திநமே இரு ஸ்வாமிகளை ப்ரார்த்திக்க, அவர்களும் நம் தேசிகனிடம் உள்ள அஸூயையால் ஶ்ராத்த விகாதம் பண்ண எண்ணங்கொண்டு பூர்ணமாகப் புசித்துவிட்டுத், தாம்பூல சர்வணம் பண்ணிக்கொண்டிருப்பதை நம் ஸ்வாமி நேரில் கண்டு, அவேளையில் மற்ற ஸ்வாமிகள் கிடைக்காததால் வருந்தித் தேப்பெருமாளையும் ஹயக்ரீவனையும் த்யானித்து முறைப்படியே ஶ்ராத்த

கர்மங்களை முடித்து ஓர் இலையில் அந்நம் முதலியவைகளைப் பரிமாறித் திரை சேர்க்க, குல தெய்வமான பேரருளாளனும் ஹயக்ரீவனும் நேரடியாக வந்து அவைகளை அமுது செய்து போனபிறகு, கடைசியாக இலையில் சிந்திக்கிடந்த ஹயக்ரீவனுடைய லாலா மயமான அம்ருதத்தை ஓர் பாத்ரத்தி லெடுத்துத் தேவியாரிடம் கொடுக்க, அவ்வம்மையும் அதை ஓரிடத்தில் வைக்க, அதைப் பார்த்திருந்த நம் குமார நயினாரும் அமுது செய்துவிட, இதனால் குபிதரான நம் தேசிகன் 'இத்துடன் வம்சம் நிற்கக் கடவது' என்று சபித்தார் என்றும் முன்னோர்கள் சொல்வார்கள். இவ்வாறு 'பேரருளாளனுடைய அநுக்ரஹத்தால் ஜனித்தவனும், திருத் தகப்பனாரைப்போல் ஹயக்ரீவனுடைய லாலாமயமான அம்ருதத்தைப் புசித்து அதனடியாக வந்த விசேஷ ஞானஸம்பத்தை யுடையவனும் ,पित्रे ब्रह्मोपदेष्ट्रे मे, என்றபடி ஸ்வாமியினிடம் ஸகல ஸம்பந்தமும் பெற்றவனுமானவன் யான்' என்று தமக்குள்ள சில மஹிமைகள் मे- என்னுமிடத்தில் விவக்ஷிதங்கள்.

இப்படித் தம்முடைய ப்ரபாவங்களைக் கூறும் ஸ்வாமி குமாரருக்கு, இவ்யாஜத்தால் ஸ்வாமிக்குள்ள மற்ற மஹிமைகளையும் சொல்லுவதிலேயே நோக்கம் என்பதை முன் கூறியவைகளால் நன்கு அறியலாம்.

திருமந்த்ரத்தில் எட்டு அக்ஷரங்கள் போல் இதிலும் எட்டுப் பதங்கள் இருப்பதால், இது திருமந்த்ரத்துக்கு ஸமானமென ஆசார்யர்களின் தோற்றம். அந்தந்த மந்த்ரங்களை ஜபித்து அந்தந்த தேவதைகளிடமிருந்து ப்ரயோஜநங்களைப் பெறுவதுபோல், வெகு நாளைக்கு முன் ஒரு மஹான் இம்மந்த்ரத்தை ஜபித்துத் தேசிகனுடைய விசேஷமான கடாக்ஷத்தைப் பெற்றாரென்று கேட்டதுண்டு.

திருவேங்கடமுடையானும் தொண்டைமான் சக்ரவர்த்தியும் ஒரு நாள் ஸம்பாஷித்துக் கொண்டிருக்கும்பொழுது, அச்சக்ரவர்த்தி, 'நீ கலியில் வேதாந்த தேசிகனாக அவதரிக்கப் போகிறதாகக் கூறினாயே; அம்மஹானைப்பற்றி அநுஸந்தித்து உஜ்ஜீவிக்க உபாயமென்ன?' என்று ஸர்வேஸ்வரனைக் கேட்க, ஸ்ரீநிவாஸனும், ஜனிக்கப் போகும் வேதாந்தாசார்யருடைய மஹிமைகளையும், அவருக்குத் தானளிக்கப்போகும் பிருதங்களையும் த்யானித்து இஸ்லோகத்தை இயற்றி அச்சக்ரவர்த்திக்கு அளித்ததாகவும் ஓர் ஐதிஹ்யமுண்டு.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ராவ் கமிட்டியில் கண்டநம்

ஸ்ரீ. உ. ப. ஜோ. ரங்காசார்ய ஸ்வாமி, ஸ்ரீ கார்யம், ஸ்ரீ அஹோபில மடம்.

ராவ் கமிட்டியாரால் சிபார்சு செய்யப்பட்ட ஹிந்து சட்டத் திருத்த மசோதா, மேனாட்டு நாகரீகத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இம்மசோதா, நமது மஹர்ஷிகளால் புராதநமாக ஏற்படுத்தப்பட்ட பழக்க வழக்கங்களுக்கும், ஹிந்து மதத்தின் அடிப்படையான கொள்கைகளுக்கும், அடியோடு உலை வைப்பதாயிருக்கிறது. ஸ்ருதி ஸ்ம்ருதி ஸதாசாரம் முதலிய ஹிந்துமதக் கோட்பாடுகளுக்கும் விரோதமாயிருக்கிறது. இம் மசோதா தர்ம ஸாஸ்த்ரத்தை அநுஸரித்துத் தயார் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்வதும் தவறு. திருத்த மசோதா தர்ம ஸாஸ்த்ரத்துக்கு விரோதமாயிருப்பதன்றியில், அதன் கொள்கைகளைச் சின்ந பின்நப்படுத்துகிறது. இந்தியாவிலுள்ள எல்லா ஹிந்துக்களுக்கும் ஒரே சட்ட மியற்ற வேண்டியதுதான் இம் மசோதாவின் முக்ய நோக்கம். ஆனால் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலுக்காவிலும் பழக்கவழக்கங்கள் மாறுபட்டிருப்பதால், எல்லாருக்கும் ஒரே சட்ட மியற்ற எண்ணங்கொண்டிருப்பது, ஹிந்து ஸமூஹத்திற்கே பெருங் கஷ்டத்தை விளைவிக்குமென்பதில் ஸந்தேஹமில்லை.

ஸ்த்ரீகள் ஒரு புருஷனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு, அந்தப் புருஷன் இறந்துவிட்டால் மறுபடியும் வேறு புருஷனைக் கல்யாணம் செய்துகொள்ள ஸாஸ்த்ரங்களும் அநுஷ்டானங்களும் இடங் கொடுக்கவில்லை. ஸ்த்ரீகள் புந: புந: விவாகம் செய்துகொண்டால், அவர்கள் எந்த கோத்ரத்தில் சேர்ந்தவர்களாவார்கள்? 'ஹதப்ரஜாயா: ப்ரஜா வர்ஷத்வம்' என்று சொல்லியிருக்கிறபடி யார் யாருக்கு க்ரியைகள் செய்வது? எப்படிச் செய்வது? அநேகம் புருஷர்களைக் கல்யாணம் செய்துகொண்டால், யாருக்கு எந்த கோத்ரத்தைக் கொண்டு எந்தப் புருஷனுக்கு க்ரியைகள் செய்வது? விவாஹங்கள் ஸாஸ்த்ரப்படி தர்மார்த்தமாகாமல் கேவலமான முறையில் காமார்த்தமாய் விடும். ஹிந்து ஸமூகக் கொள்கையும் அடியோடு அழிந்துவிடும். ஸ்த்ரீகள் தோஷ முள்ளவர்களானால் "ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர: । ஸங்கரோ நரகாயைவ

குலக்னானாம் குலஸ்ய ச। பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்தபிண்டோதகக்ரியா:॥'' என்று கீதையில் சொல்லியிருக்கிறபடி, தாங்கள் கெட்டுப் போவதோடு தங்கள் பித்ருபிதாமஹாதிகளையும் நரகத்துக்கு ஆளாக்குகிறார்கள். ஸ்த்ரீகள் பதிவ்ரதையாக இருந்தால், ''யதி வாஸ்த்யேகபத்நீத்வம் ஶீதோ பவ ஹநூமத:'' என்கிறபடி ஸீதை ப்ரதிஜ்ஞை பண்ணின ப்ரகாரம் பதிவ்ரதா மாஹாத்ம்யத்தினால் அக்நி பாதிக்க வில்லை யென்பது இதிஹாஸஸித்தம். ஆனதால் ஸ்த்ரீகள் காமத்தின் பொருட்டு ஒரு புருஷனைக் கல்யாணம் செய்துகொண்டு, இந்த லோகத்தில் க்யாதியையும் பரலோகத்தில் நல்ல கதியையும் அடையவேண்டியதிருக்க, காமார்த்திகளாக அநேக புருஷர்களைக் கல்யாணம் செய்துகொண்டால் அவர்களுக்கு இந்த லோகத்தில் கெட்ட பெயரும் பரலோகத்தில் நரகமும் ஸம்பவிக்கும். அவர்களை இதற்கு ஆளாக்குகிறது இச் சட்டம்.

திருத்த மசோதாவில் கூறப்பட்டுள்ள தாயபாகமானது, புத்ரனுக்குக் கொடுப்பது போல் பெண்களுக்கும் ஸமமாகப் பிரித்துக்கொடுக்கவேணுமென்கிறது. 'புத்ரா: பௌத்ரா ஹரேயு: தாயம் ஸ்வகஜகு'' என்று ஶாஸ்த்ரம் புத்ரனுக்கு மட்டும் ஸொத்தைப் பிரித்துக் கொடுக்கவேணு மென்கிறது. ஸ்த்ரீகளுக்குக் கல்யாணம் ஆனவுடன், அவர்கள் புருஷன் கோத்ரத்திற்கு மாறிவிடுகிறபடியால், அவர்களுக்குப் புருஷன் ஸொத்தில்தான் பாகமே தவிர தகப்பனார் ஸொத்தில் பாகம் கிடையாது. இம் மசோதாவினால் பரம்பரையாக அவிபக்தமாயிருக்கும் அநேக குடும்பங்களுக்கு ஆபத்து ஏற்படுகிறதுடன், ஒற்றுமை குறைந்து பிளவுகள் அதிகரிக்கும். இவைகளைத் தவிர, மசோதாவில் அநேக விஷயங்கள் ஆக்ஷேபிக்கக் கூடியதாயிருக்கின்றன. ஆகையால் இந்த மசோதா ஆரம்ப முதல் முடிவு வரை ஹிந்து ஸமூஹத்திற்கே அநர்த்தத்தை விளைவிக்கக் கூடியதாயிருப்பதால், இதைச் சட்டமாக்கக்கூடா தென்பதைக் கேட்டுக்கொள்கிறோம். இம் மசோதாவினால் முக்யமாகப் பாதிக்கப்படுபவர்கள் ஸ்த்ரீகளா யிருப்பதால், இம் மசோதாவைத் தமிழில் ப்ரசுரித்து க்ராமம் தோறும் அனுப்பி, இரண்டு மாதம் கழித்து விசாரணைக்குக் கொண்டு வரவேணு மென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

210134

—

(1)

ஸ்ரீ அழகியசிங்கரின் மைஸூர் தேஶ யாத்ரை

ஸ்ரீ அழகியசிங்கர் கங்கேரியிலிருந்து பெங்களூர் எழுந்தருளும்போது, இவ்வூர் ப்ரபல அதிகாரிகளும் ஆஸ்திகாக்ரேஸரர்களும் வழக்கப்படி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை யும் ஸ்ரீ அழகியசிங்கரையும் பூர்ண கும்பத்துடனும் வாத்ய கோஷத்தோடும் எதிர்கொண் டழைத்துத் துளஸித் தோட்டத்தில் எழுந்தருளப் பண்ணினார்கள் என்பது வாசகர்களுக் குத் தெரிந்த விஷயம்.

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ வேதாந்த யதீந்த்ர மஹா தேசிகனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ ப்ரஸந்ந க்ருஷ்ணப் பெருமாளுடைய சதாபிஷேக மஹோத்ஸவத்தை நடத்திவைக்கவேணு மென்று பக்த ஶிரோமணி ஸ்ரீமான் கருடாசார்ய ஸ்வாமியால் ப்ரார்த்திக்கப்பட்டு, ஷை உத்ஸவம் யதாக்ரமம் ஸ்ரீ அழகியசிங்கரால் அதி விமர்சையாக நடத்தப்பட்டது. பின்பு அநேக நாட்கள் ஸ்ரீமான் கருடாசார்ய ஸ்வாமியால் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் பரிபூர்ண மாக ஆராதிக்கப்பட்டு, திருமஞ்ஜனம் டோலோத்ஸவம் முதலியன செய்துவைக்கப்பட்டன. ''தேவு மற்றறியேன் குருகூர் நம்பி'' என்று அருளிச்செய்த மதுரகவிகள்போல, தமக் குப் பரந்யாஸம் பண்ணின பரமாசார்யனை ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் இந்த ஸ்வாமிக்கு இருக்கும் பக்தி பரீவாஹம் ஆச்சர்யப்படத்தக்கது.

''கதா த்ரக்ஷ்யாமஹே ராமம்'' என்பதுபோல், அநேக வர்ஷங்களாக சாதக பக்ஷிபோல் காத்துக்கொண்டிருக்கும் பெங்களூர் வாஸிகளான ஆஸ்திகாக்ரேஸரர்கள் அளவற்ற உத்ஸாஹத்துடனும் பக்திஶ்ரத்தையுடனும் ஸஹஸ்ரஸங்க்யயா ப்ரதி தினம்

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனைப் பரிபூர்ணமாக ஆராதித்துப் பெரியபெருமாளுக்குத் திருமஞ்ஜநமும் கண்ணனுக்கு டோலோத்ஸவமும் செய்துவைத்து நிரவயிகாநந்த ஹ்ருதர்களானார்கள்.

இவ்வூர் ஸ்த்ரீ புருஷர்களுடைய அளவற்ற பக்தியையும், பெருமாளை ஆராதிப்பதில் உள்ள உத்ஸாஹத்தையும், விநயம் முதலியவைகளையும் கண்டு ஸ்ரீ அழகியசிங்கர், இன்னும் சில காலம் இங்கேயே இருக்கலாமென்று திருவுள்ளம் பற்றும்படியா யிருந்தது. மைஸூர் ஸம்ஸ்தாநத்தில் ஸஞ்சாரமாக எழுந்தருளும்போது ஆங்காங்கு ஸ்ரீரங்கப்பட்டணம் திருநாராயணபுரம் தொண்டனூர் முதலிய இடங்களில் அதிகாரிகளால் செய்யப்பட்ட ஏற்பாடுகள் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ள முகக்கும்படியாய் இருந்தது.

ஜோ. ரங்காசார்யர், ஸ்ரீ கார்யம், ஸ்ரீ அஹோபில மடம்.

(2)

பண்ருட்டி ஸ்ரீ மஹாராதநம்

நிகழும் தாரண வருஷம் தைமீ 28உ (10-2-1945) சனிக்கிழமை க்ருஷ்ணபக்ஷம் த்ரயோதசி திதியில், ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய 22-வது வார்ஷிக மஹாராதந மஹோத்ஸவம் வழக்கப்படி பண்ருட்டி அக்ரஹாரத்தில் நடைபெறும். அதற்காக நாளது தைமீ 26உ (8-2-45) வியாழக்கிழமை காலையில் வேதபாராயண அத்யாபகங்கள் உபக்ரமித்து மூன்றுவது நாளில் வீதி உத்ஸவம் சாத்துமுறை முதலிய மஹோத்ஸவங்கள் நடத்தப்படும். தவிர, நமது ஸித்தாந்த விஷயமாக உபந்யாஸாதிகளைச் செய்வதற்குப் பண்டிதர்களும் ஆஹ்வாநம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆஸ்திகர்களான ஸ்வாமிகளெல்லாரும் அக்காலத்தில் அவ்விடம் எழுந்தருளி அநுக்ரஹிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

கே. பார்த்தஸாரதி ஐயங்கார்.

(3)

திருப்பதியில் பகவத்கீதா உபந்யாஸம்

"ஸ்ரீ வேதாந்த தேசிக ஸம்ப்ரதாய ஸுதாஸ்வாதிநீ" ஸபையின் சார்பாக, மீமாம்ஸார்ணவ மீமாம்ஸா கேஸரி ஸ்ரீ. உ.வே. D. T. தாதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியில் 1-12-44 முதல் 8-1-45 வரை ஸ்ரீ பகவத்கீதை 18 அத்யாயங்களையும் ஒவ்வொரு ஶ்லோகமாக அனைவரும் அறியும்படி உபந்யஸித்து முடித்தார். நகரிலுள்ள பல ப்ரமுகர்களும் ஸ்த்ரீகளும் இதற்கு விஜயம் செய்திருந்தனர். 8-1-45 முடிவு தினத்தன்று, டாக்டர் A. சங்கரன், M. A. Phd. (க்யூரேடர் கவர்ன்மெண்ட் லைப்ரரி) அவர்கள், D. T. ஸ்வாமியினுடைய உபந்யாஸ அழகையும், இவருக்கிருக்கும் உபய பாஷா பாண்டித்யத்தையும் மிகக் கொண்டாடிப் பேசினர்.

உலகத்திலேயே ஸம்ஸ்க்ருத-தமிழ் உபந்யாஸங்களில் நிகரற்ற முதல் புருஷராக அனைவராலும் கொண்டாடப்பட்டு விளங்கும் இம் மஹான், உபந்யாஸ ஸாமர்த்யத்திலும், க்ரந்தங்களை நன்கு ஆராய்ந்து கவிகளின் உள்ளத்தை உள்ளபடி உணர்ந்து உரைப்பதிலும், மிகச் சிறந்தவர் என்பது அனைவரும் அறிந்த விஷயம்.

தேசிக பக்தன்.

(4)

கல்யாணபிவர்த்திநீ ஸபை, மதுராந்தகம்

ஷை ஸபையானது 7-12-44 மாலை, மீமாம்ஸாத்யாபகர் ஸ்ரீ உ. வே. S. கோபாலாசார்ய ஸ்வாமி தலைமையில், வ்யாகரண சிரோமணி K. G. ஸந்தான கோபாலன் என்னும் வித்யார்த்தியால் "गुणाः पूजास्थानं" என்னும் விஷயத்தைக் குறித்தும், 16-12-44 மாலை, ஷை காலேஜ் ப்ரின்ஸிபால் (வ்யாகரண சிரோமணி) ஸ்ரீ உ. வே. C ராகவாசார்ய ஸ்வாமி தலைமையில் வ்யாகரண சிரோமணி P. C. வரதன் என்னும் வித்யார்த்தியால் "आरोग्यम्" என்னும் விஷயத்தைப் பற்றியும் உபந்யாஸங்கள் செய்யப்பட்டன.

K. ராமாநுஜாசார்யர், ஸபை கார்யதர்சி.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन् प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

நான்காவது மாலோல வித்வத் ஸதஸ்.

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் இன்னும் பெங்களூரிலேயே எழுந்தருளியிருக்கிறான். மாலோல வித்வத் ஸபையின் நான்காவது வார்ஷிக ஸதஸ்ஸும் அவ்விடத்திலேயே நடைபெறுவதாக ஸ்ரீமுகம் கிடைத்திருக்கின்றது. அது நிகழும் தைமீ 20௳ (2–2–45) வெள்ளிக்கிழமையன்று ஆரம்பித்து, தைமீ 29௳ (11–2–45) ஞாயிற்றுக்கிழமை முடிவு பெறுகின்றதாம். அன்று ஸ்ரீ அழகிய சிங்கருடைய வார்ஷிகத் திருநக்ஷத்ரமும் ஸம்பவிக்கின்றபடியால், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அன்று அத்யத்புதமான ஒரு மஹோத்ஸவத்தைக் கண்டருள்வான். அன்றைய தினம் நடக்கும் வித்வத் ஸதஸ்ஸில் "ஶததூஷணீ" என்னும் க்ரந்த ஸம்பந்தமாக வாக்யார்த்தமும் நடைபெறுமாம். இப்படிப்பட்ட மஹோத்ஸவத்தை ஸாக்ஷாத்தாக ஸேவிக்கப் பெற்ற ஸுக்ருதிகளின் பாக்யமே பாக்யம்.

औदार्यविजितस्वान्तैर्विद्यावृद्धिसमुत्सुकैः ।
श्रीरङ्गमुनिभिस्सृष्टा सभेयमभिवर्धताम् ॥

சென்னையில் திருப்பாவை உபந்யாஸம்

ஸ்ரீ பகவத் கதா ப்ரஸங்க ஸபையின் ஆதரவில் பதினொன்காம் வர்ஷமாகிய இவ்வாண்டும் ஸ்ரீ. உ. வே. P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமி திருப்பாவையை விசேஷார்த்தங்களுடன், செவிக்கினிய செஞ்சொற்களால் தேனும் பாலும் கன்னலு மமுது மொக்க அருளிச் செய்து வந்தார். சென்ற போகியன்று (13–1–45) சாற்றுமறையும் ஆண்டாள் திருக்கல்யாணமும் நடந்தேறின. ஆண்டாள் திருக்கல்யாண உத்ஸவத்தை வழக்கம்போல ஸ்ரீ. உப. M. ஸுதர்சநம் ஐயங்கார் ஸ்வாமி நடத்திவைத்தார். அன்று ஆயிரக்கணக்கான பக்தவர்க்கங்கள் அதை கூடி அநுபவித்தார்கள். அன்று ஸுப்ரஸித்தரான தேசிக தர்சந ரத்ந தீபமாகிய ஸ்ரீ. உ. வே. V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி அக்ராஸநத்தை அலங்கரித்தார். காலக்ஷேப அநந்தரம் அக்ராஸநஸ்தர் ஸ்வாமியின் உபய வேதாந்த பாண்டித்யம் ப்ரவசந விமர்சம் க்ரந்த வெளியீடுகள் இவைகளைப் பெரிதும் பாராட்டிப் பேசியதுடன், ஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டாய் எழுந்தருளியிருந்து உலகினரை உஜ்ஜீவிப்பிக்க வேண்டுமெனப் பேசி முடித்தார். பிறகு ஸ்வாமிக்கு ஸம்பாவனைகள் நடந்து ஸபை இனிது முடிந்தது.

*   *   *   *

மாம்பலம் திருப்பாவை உபந்யாஸம்

ஸ்ரீ. உ. வே. மஹா வித்வான் காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி, சென்னைப் புது மாம்பலம் வாஸிகளான ஆஸ்திக ஜநங்களின் ப்ரார்த்தனைக்கு இணங்கி, சென்ற மார்கழி மாதம் த்யாகராயநகர் ஸ்ரீ ராமக்ருஷ்ண மிஷன் பாடசாலையில் சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமல் திருப்பாவை உபந்யாஸத்தை ஶ்ரோதாக்கள் பரவசமடைய, பூர்வாசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகளைப் பின்பற்றி உபந்யஸித்தார். ஆஸ்திகர்கள் கௌதூஹலத்துடன் சாற்றுமறையை விசேஷ வைபவத்துடன் நடத்திவைத்து ஸ்வாமியைக் கௌரவித்தனர். அடுத்த நாள், ஸ்ரீரங்கம் ஸ்ரீ உப சடகோபாசார்ய ஸ்வாமியால் 'கோதாபரிணயம்' என்றும் ஹரிகதா காலக்ஷேபம் வெகு ஸ்வாரஸ்யமாக நடத்தப்பட்டது.

*   *   *   *

ஸ்ரீ தேசிகப் ப்ரபந்தம்—உரை

இக்ரந்தம் கிடைக்கப் பெற்றோம். இக்ரந்தத்தின் உரையாசிரியர் ஸ்ரீ. உப. ஒப்பிலியப்பன் ஸந்நிதி வ. ந. ஸ்ரீ ராமதேசிகாசார்ய ஸ்வாமி. இந்த ஸ்வாமி வடமொழி தென்மொழியெனும் இரு மொழிகளிலும் மிக்க புலமை வாய்ந்து முறையே சிரோமணிப் பட்டமும் வித்வான் பட்டமும் பெற்றவர்: தமது தகப்பனாரிடம் காலக்ஷேபங்கள் செய்து விசேஷ ஜ்ஞாந ஸம்பாதநம் செய்தவர்; ஸம்ப்ரதாயம் அறிந்தவர். இத்தகைய அதிகாரியே ஸ்ரீ தேசிகன் பாசுரங்கட்கு உரையிட வல்லவர் என்பதை உறுதியாய்க் கூறுவோம். இக்ரந்தத்தில்,

Regd. No. M. 4437

ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த பாசுரங்கட்குப் பதவுரையும் விரிவான பொழிப்புரையும் பாசுரங்களின் உட்கருத்தும் யாவர்க்கும் தெள்ளிதில் விளங்கும் எளிய நடையில் அழகாக எழுதப்பட்டுள்ளன. தேஹாஸ்வாஸ்த்யத்தாலும் அவ்காஶ மின்மையாலும் இக்ரந்தத்தைக் கூலங்கஷமாக ஸேவிக்க இயலவில்லை. எனினும் பார்த்த சில விடங்களில் விஷயங்கள் இனிமையாகவும் தெளிவாகவும் காணப்படுகின்றன. பரமத பங்கத்தில் ஒவ்வொரு மதத்தின் கொள்கைகள் விஶதமாக விளக்கப்பட்டுள்ளன. மெய் விரத மான்ர்யத்தில் ஸ்ரீ ஹஸ்திகிரி மாஹாத்ம்ய ரஹஸ்யத்தின் வாக்யங்கள் விடாமல் தமிழில் நன்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. திருமந்த்ர–த்வய– சரமஶ்லோகச் சுருக்குகளில், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம் சில்லரை ரஹஸ்யம் முதலிய க்ரந்தங்களில் அருளிச்செய்த விஷயங்களும், கீதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீ கீதாபாஷ்யம் ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷைகளில் அருளிச்செய்த விஷயங்களும், அவஶ்யமான இடங்களில் ஸ்ரீ தாத்பர்ய சந்த்ரிகையில் உள்ள விஷயங்களும் ஆங்காங்கு ப்ரகாஶிக்கின்றன. இவ்வாறே மற்றுமுள்ள ப்ரபந்தங்களிலும் பர்பல விஶேஷார்த்தங்கள் பொலிந்து காணப்படுகின்றன. இவ்விடத்தில் நாம் முக்யமாகக் கூறவேண்டுவ தொன்றுண்டு. ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம் தழைத் தோங்குவதற்கென்றே அவதாரம் செய்தாரென்று சொல்லலாம் படியான ஸ்ரீ தேசிக தர்ஶந ரத்நதீபம் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியின் பெரு முயற்சியும் ஊக்கமுமே இவ்வுரை நூல் திருவவதரித்ததற்கு மூலகாரணம். தவிர ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உ்ப. ஐயா க்ருஷ்ண தாதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. திருக்குடந்தை ஸ்ரீநிவாஸ பாட்டராசார்ய ஸ்வாமி முதலிய மஹா ஜ்ஞாதாக்களுடைய ஸம்பந்தமும், மதுரைத் தமிழ்ச் சங்க வித்வான்கள் ஸ்ரீ. உப. திருநாராயணையங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உப. அப்பணையங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உப. ராமாநுஜையங்கார் ஸ்வாமி முதலிய அறிஞர்களுடைய ஸம்பந்தமும் பெற்றிருப்பதால், இக்ரந்தம் மூலபாடத்திலும் பதார்த்த விஶேஷார்த்தங்களிலும் பரம ஸ்வாதுவாக விளங்குகிறது. இக்ரந்தம், வ்யாக்யாந ஶைலி யறியாத பாலர் முதல் ஜ்ஞாநவான்கள்வரை வாசிய யாவரும் ஓதி உணர்தற் குரியது. ஸ்ரீ வைஷ்ணவ உலகத்துக்கு இத்தகைய பேருதவி செய்த ஸ்ரீமான் ஸ்ரீராமதேசிகாசார்ய ஸ்வாமியை இவ்வுலகம் என்றும் போற்றக் கடமைப்பட்டுள்ளது. இக்ரந்தத்தின் க்ரயம் ரூ. 3-8-0. தபாற் செலவு வேறு. இதனை, "ஸ்ரீ. உப. சி. ர. ஸ்ரீநிவாஸ பாட்டராசார்யர், 47, பாட்டராசார்யர் தெரு, கும்பகோணம்" என்னும் விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

தாரண ஞு மாசி மீ

1வ	திங்கட்கிழமை	...	ஸர்வ அமாவாஸயை; சூந்யதிதி: கும்ப ஸங்க்ரமண தர்ப்பணம்.
5வ	வெள்ளிக்கிழமை	...	சதுர்த்தி–பஞ்சமி திதித்வயம்.
6வ	சனிக்கிழமை	...	ஷஷ்டி திதி.
10வ	புதன்கிழமை	...	ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம்.
11வ	வியாழக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
12வ	வெள்ளிக்கிழமை	...	ஹரிவாஸரம் நாழிகை 6-44 வரையில். ஸ்ரீ குலசேகரப் பெருமாள் திருநக்ஷத்ரம்.
15வ	திங்கட்கிழமை	...	மஹா மகம்.
17வ	புதன்கிழமை	...	த்விதீயை திதி
18வ	வியாழக்கிழமை	...	த்ருதீயை திதி.
19வ	வெள்ளிக்கிழமை	...	சதுர்த்தி திதி.
20வ	சனிக்கிழமை	...	பஞ்சமி திதி.
21வ	ஞாயிற்றுக்கிழமை	...	அதிதி.
22வ	திங்கட்கிழமை	...	ஷஷ்டி திதி.
27வ	சனிக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
28வ	ஞாயிற்றுக்கிழமை	...	த்வாதசிக்கு ஸாயாஹ்ந வ்யாப்தி இல்லையாதலால் ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு ஶ்ரவணத்வாதசீ உபவாஸம் இல்லை.
29வ	திங்கட்கிழமை	...	த்ரயோதசி–சதுர்த்தசி திதித்வயம்.
30வ	செவ்வாய்க்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை கும்ப அமாவாஸ்யை திதி. பங்குனிமீ 1வ... மீந ஸங்க்ரமண தர்ப்பணம்.

Erinted by K. Satakopachariar, at the Liberty Press 10, Linghi Chetty Street. G.T., Madras
Pdited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras.